Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 191/2021 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | மாரிமுத்து |
| Father's Name | – | பழனிச்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 10th September 2022.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது கோவை மேட்டுப்பாளையத்தில் குடியிருந்து கட்டிட வேலை செய்து வருகிறேன். கடந்த 14.10.2020 ம் தேதி மாலை 4 மணிக்கு எனது மனைவியின் அண்ணன் மணிகண்டன் என்பவர் கரப்பாடி பிரிவு அருகில் நின்றுக்கொண்டிருந்தார். அவருக்கு எதிராக சாலையின் மறுபுறம் நானும், நாகேந்திரன் என்பவரும் நின்றுக்கொண்டிருந்தோம்.

அப்போது எனது மனைவியின் அண்ணன் மணிகண்டனும், அவருடன் வந்த சின்னதொப்பம்பட்டியை சேர்ந்த மணிகண்டன் என்பவரும் XL Super இரு சக்கர வாகனத்தில் கரப்பாடி பிரிவில் இருந்து சின்னதொப்பம்பட்டி செல்வதற்காக நின்றுக்கொண்டிருந்தபோது, கிழக்கில் இருந்து வேகமாக வந்த லாரி TN 52 B 5955 அவர்கள் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தியது.

மேற்படி விபத்தில் இருவருக்கும் உடலில் காயம் ஏற்பட்டது. பின்பு நாகேந்திரன் என்பவர் ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்தார். ஆம்புலன்ஸ் வந்தபிறகு அவர்கள் இருவரையும் ஏற்றிகொண்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு நாகேந்திரன் கொண்டு சென்றார்.

நான் சம்பவயிடத்திலேயே லாரி ஓட்டுநருடன் இருந்தேன். மேற்படி விபத்தினை ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநரை நான் பார்த்தேன். தற்போது பார்த்தாலும் எனக்கு அடையாளம் தெரியும். (**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை. எதிரியின் சார்பாக குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது** )

பின்னிட்டு வழக்கு விபத்து குறித்து காவல் நிலையத்திற்கு போனில் தகவல் தெரிவித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அந்த

புகார் மனு **அ.சா.ஆ.1/அ.சா.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி விபத்தில் எனது மனைவியின் அண்ணன் மணிகண்டன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். மற்றொரு மணிகண்டனுக்கு காலில் காயம் ஏற்பட்டிருந்தது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-ஈ.மணிகண்டன்,பிஏ,பிஎல்
நீதித்துறை நடுவர் எண்.2
பொள்ளாச்சி.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 191/2021 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | நாகேந்திரன் |
| Father's Name | – | கனகராஜ் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 10th September 2022.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது சின்ன தொப்பம்பட்டியில் குடியிருந்து ஒயர் பின்னல் வேலை செய்து வருகிறேன். 14.10.2020 ம் தேதி நானும், அ.சா.1 ம் கரப்பாடி பிரிவில் நின்றுக்கொண்டிருந்தபோது, எனது மாமா மணிகண்டன் என்பவரும், மற்றொரு பாண்டா (எ) மணிகண்டனும் இரு சக்கர வாகனத்தில் கரப்பாடியில் இருந்து தொப்பம்பட்டி செல்ல கரப்பாடி பிரிவு வளைவில் நின்றுக்கொண்டிருந்தார்கள்.

அப்போது கிழக்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த லாரி மேற்படி எனது மாமா வந்த இரு சக்கர வாகனத்தில் மோதியதில், இருவரும் கீழே விழுந்துவிட்டார்கள். மேற்படி விபத்தில் இருவருக்கும் உடலில் காயம் ஏற்பட்டது. பின்பு ஆம்புலன்ஸ் வரவழைத்து பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு இருவரையும் சிகிச்சைக்காக அழைத்து சென்றேன்.

மேற்படி விபத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக எனது மாமா மணிகண்டன் என்பவர் இறந்துவிட்டார். மற்றொரு பாண்டா (எ) மணிகண்டனுக்கு காலில் காயம் ஏற்பட்டிருந்தது. மேற்படி விபத்தினை ஏற்படுத்திய லாரியின் பதிவு எண் தெரியவில்லை. மேற்படி லாரியின் ஓட்டுநரை தற்போது பார்த்தால் தெரியும். (**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை. எதிரியின் சார்பாக குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது** ) இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-ஈ.மணிகண்டன்,பிஏ,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2

பொள்ளாச்சி.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 191/2021 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | மணிகண்டன் |
| Father's Name | – | முருகேசன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 10th September 2022.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது பெரிய தொப்பம்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். தேதி நினைவில்லை. கடந்த அக்டோபர் 2020 ல் சின்ன தொப்பம்பட்டியை சேர்ந்த சண்முகம் மகன் மணிகண்டன் என்பவருடன் நான் வேலைக்கு சென்றுவிட்டு இரு சக்கர வாகனத்தில் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தோம்

அப்போது கரப்பாடி பிரிவில் சாலையினை கடக்க சுமார் மாலை 4 மணிக்கு நின்றுக்கொண்டிருந்தோம். அப்போது பொள்ளாச்சியிலிருந்து வந்த லாரி ஒன்று எங்கள் மீது மோதியது. அதில் எனக்கு காலில் அடிப்பட்டது. சின்ன தொப்பம்பட்டியை சேர்ந்த மணிகண்டனுக்கு உடலில் காயம் ஏற்பட்டது-

மேற்படி மாரிமுத்து, நாகேந்திரன் என்பவர்கள் எங்களை ஆம்புலன்ஸ் மூலம் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மேற்படி விபத்தில் மணிகண்டனுக்கு ஏற்பட்ட காயங்களினால் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். மேற்படி விபத்தினை ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-ஈ.மணிகண்டன்,பிஏ,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2

பொள்ளாச்சி.